## 2026 –இல் தி.மு.கழக அணி 200 தொகுதிகளை வெல்ல

# திருவாரூரில் இருந்து கணக்கைத் தொடங்கிட வேண்டும்!

## திருவாரூர் மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

திருவாரூர்,மார்ச்.8-

**கழகத்தலைவர் - முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய திருவாரூர் மண்ணில், திருவாரூர் மாவட்டத்துக்கு உட்பட்ட கழகத்தின் சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் மற்றும் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது, `நம்மைச் சூழவரும் இந்தித் திணிப்பு' - `தலைக்கு மேல் கத்தியாய் தொங்கும் நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை' என தமிழ்நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் ஒன்றிய அரசின் திட்டங்களை வீழ்த்திட, கழக அணிகள் முன் வரிசையில் நின்று பணியாற்ற வேண்டும்.**

**2026 சட்டப்பேரவைத் தேர்தலில் கழக அணி 200 தொகுதிகளை வெல்ல வேண்டும் என்றால், அதற்கான கணக்கினை திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, நன்னிலம் தொகுதிகளில் இருந்து தொடங்கிட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் - தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**




### பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்ற நாள்

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், கலைஞர் அவர்களின் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த சார்பு அணி நிர்வாகிகள் உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். 1967-ஆம் ஆண்டு நம் திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக ஆட்சி அமைத்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நாள் தான் இன்று. அந்த மார்ச் 6-ஆம் தேதி அன்று உங்களை எல்லாம் சந்திப்பதில் எனக்கு கூடுதல் பெருமை. இந்தியாவிலேயே ஒரு மாநிலக் கட்சி முதன்முறையாக ஒரு மாநிலத்தில் ஆட்சியில் அமர்ந்தது என்ற வரலாற்றைப் படைத்தது என்றால், அதில் முதல் இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் தான். நாம் வரலாறு படைத்த நாள் இன்று.

### கழகக் கோட்டை திருவாரூர்!

திருவாரூர் மாவட்டத்திற்கு கழக உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத்துறை அமைச்சராக பல முறை வந்து இருக்கிறேன். உங்களின் அன்பையும், ஆதரவையும் பெறுவதற்கு, தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக உங்களை சந்திக்க வந்திருக்கிறேன். இந்த திருவாரூர் மண், சாதாரண மண் கிடையாது. நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தந்த மண் இந்த திருவாரூர் மண். இந்த திருவாரூரில்தான் 1930-களில் தமிழ்க் கொடியை ஏந்தி, இந்தித் திணிப்புக்கு எதிராக தனது அரசியல் பயணத்தை தொடங்கினார் நம் கலைஞர் அவர்கள். அதே திருவாரூரில் தன் திருமணம் நடைபெற்றபோது, திருமணத்திற்கு ஒரு சில விநாடிகளுக்கு முன்புகூட இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஒரே தலைவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இன்னும் கூடுதல் பெருமை என்னவென்றால், கலைஞரின் மூத்த பிள்ளையாம் `முரசொலி'யை இந்தத் திருவாரூரில்தான் முதன் முதலாக கையெழுத்து பிரதியாக ஆரம்பித்தார். திருவாரூரையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் எந்த நேரத்திலும் பிரித்துப் பார்க்க முடியாது. அதே உணர்வோடுதான் இன்றைக்கு நான் திருவாரூர் மாவட்டத்திற்கு வந்து இருக்கிறேன். திருவாரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கால் படாத இடமே கிடையாது. நம் தலைவர் அவர்களின் கால் படாத இடம், ஊர், தெரு கிடையாது. அண்ணன் பூண்டி கலைச்செல்வன் அவர்களைத் தந்த மண் இந்த திருவாரூர் மண் என்பதும் கூடுதல் பெருமை. இன்றைக்கு அவரைப்போலவே அண்ணன் பூண்டி கலைவாணன் அவர்களும் திருவாரூர் மாவட்டத்தில் கழகத்தைக் கோட்டையாக மாற்றி, கட்டுக்கோப்பாக வைத்து இருக்கிறார்.

### தலைவரின் கட்டளை இது!

நம் கழகத் தலைவர் அவர்கள் பொறுப்பேற்று நாம் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றி பெற்று இருக்கிறோம். இதுவே ஒரு மிகப்பெரிய சரித்திர வெற்றி. குறிப்பாக நடந்து முடிந்த 2024-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில், திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய தஞ்சாவூர், நாகப்பட்டினம், தொகுதிகளில் நம் கழக வேட்பாளர் முரசொலி அவர்களையும், கூட்டணி வேட்பாளர் அண்ணன் செல்வராஜ் அவர்களையும் மிகப்பெரிய அளவில் வெற்றிபெற்றார்கள். அதற்கு உங்கள் அனைவரின் உழைப்பும் மிக மிக முக்கியம். அதற்கு இந்த நேரத்தில் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வர இருக்கிறது. இது நம் இயக்கத்திற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். 2026-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பணிகளை முதன்முதலில் ஆரம்பித்தது, நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். சட்டமன்ற தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க முதலமைச்சர் அவர்கள் ஒரு ஒருங்கிணைப்பு குழுவை அமைத்தார். அதேபோல் களத்தில் பணிகளை உங்களுடன் இணைந்து ஒருங்கிணைக்க 234 தொகுதிகளுக்கும் தொகுதி பார்வையாளர்களை தலைவர் நியமித்தார். அதன் தொடர்ச்சியாக இன்று தலைவர் அவர்கள் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், அந்த மாவட்ட நிர்வாகிகளோடு ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உள்ளார்கள். தலைவர் அவர்கள் எனக்குக் கொடுத்த அறிவுரை, நீ எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், அங்கு இருக்கின்ற சார்பு அணிகளை அழைத்து உங்களுடன் கலந்துரையாட வேண்டும் என்பது. தலைவரின் கட்டளையின் தொடர்ச்சியாகத்தான் இந்தக் கூட்டம் இன்றைக்கு இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### உங்களைச் சார்ந்தே கழகம்!

அணிகளின் கூட்டம். அணிகள் என்றால், ஆங்கிலத்தில் `விங்ஸ்' என்று சொல்வார்கள். உதாரணத்திற்கு `யூத் விங்', `ஸ்டூடண்ட் விங்', `ஃபார்மர்ஸ் விங்' என்று சொல்வார்கள். விங்ஸ் என்றால் தமிழில் 'சிறகுகள்' என்று அர்த்தம். இப்படி பல்வேறு சிறகுகளைக் கொண்டதுதான் நம் திராவிட முன்னேற்றக் கழகம். இன்று நம் கழகம் உயர, உயரப் பறந்து கொண்டிருப்பதற்கு காரணம், அதற்கு சிறகாக இருக்கின்ற நீங்கள்தான் காரணம்.

சிலருக்கு தலைமைக் கழகத்தில் பொறுப்பு கொடுக்கவில்லையே என்று மனக்கசப்பு இருக்கும். இந்த மாவட்டத்தில் உங்களைப் பார்க்கும்போது தோன்றவில்லை. சில மாவட்டங்களுக்கு செல்லும்போது அவர்களுக்கு அந்த எண்ணம் இருக்கும். நாம் வெறும் சார்பு அணிதானே என்று நினைப்பு இருக்கும். ஆனால், ஒன்றை மட்டும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நம் தலைமைக் கழகம் உங்களைச் சார்ந்து இருக்கின்ற கழகம். அதனால்தான் உங்களுக்கு பெயர் சார்பு அணி. தலைமையே உங்களைச் சார்ந்திருக்கிறது. அதனால்தான் சார்பு அணி என்று குறிப்பிடுகிறோம்.

### அங்கீகாரம் கிடைக்கும்!

இன்னும் சொல்லப்போனால், இளைஞர் அணியில் இருந்து வந்தவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். கழகத்தின் பொதுச்செயலாளர் யார் என்று பார்த்தீர்கள் என்றால், அவர் மாணவர் அணியில் இருந்து வந்தவர். உங்களின் மாவட்ட அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தகவல் தொழில்நுட்ப அணியில் இருந்து வந்தவர். இன்றைக்கும் தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். மகளிர் அணி, வழக்கறிஞர்கள் அணி போன்ற பல்வேறு அணிகளில் இருந்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று நிறைய பேர் வந்திருக்கிறார்கள்.

அதனால் சார்பு அணிகளுக்கான முக்கியத்துவம் என்றைக்கும் குறையாது. நிச்சயமாக அது நடக்கும். சார்பு அணிகளை கழக அமைப்பில் முக்கிய பொறுப்புகளில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக் களம். உங்களின் கடமையை நீங்கள் சரியாகச் செய்து கொண்டு வந்தீர்கள் என்றால், கண்டிப்பாக உரிய நேரத்தில் நம் தலைவர் அவர்கள் அதற்கான அங்கீகாரத்தை நிச்சயம் உங்களுக்குக் கொடுப்பார். அதற்கு ஆயிரக்கணக்கான எடுத்துக்காட்டுகள் உள்ளன. நீங்கள் ஒவ்வொருவரும் 250-லிருந்து 300 வாக்குகளை உங்கள் கையில், கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்கள் என்றால், யாராலும் உங்களைச் சார்ந்து இருக்காமல் இருக்க முடியாது. உங்களை நிச்சயம் யாராலும் அவமதிக்க முடியாது. அந்த நிலைமையை நீங்கள்தான் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

### சுயமரியாதை மிக்க அரசு அது!

இன்றைக்கு தமிழ்நாடு மிக மிக முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். ஒரு பக்கம் ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் மீது மும்மொழிக் கொள்கை என்று சொல்லி, இந்தியைத் திணிக்க வேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க. பாசிச அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. மும்மொழிக் கொள்கைகையை ஏற்றுக்கொண்டால்தான் பள்ளிக்கல்வித் துறைக்குத் தர வேண்டிய ரூ.2,150 கோடியைத் தருவோம் என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளிப்படையாக மிரட்டுகிறார். இன்னும் ஒரு படி மேலே சென்று உயர்கல்வித் துறைக்கு தர வேண்டிய 5 ஆயிரம் கோடியையும் தரமாட்டோம் என்று சொல்கிறார். நீங்கள் மும்மொழிக் கொள்கையையும், புதிய கல்விக் கொள்கையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்.

இந்தியை நேரடியாகக் கொண்டு வந்து விட்டால், நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று குறுக்கு வழியில் மும்மொழிக் கொள்கையைக் கொண்டுவந்து இந்தியைத் திணிக்கப் பார்க்கிறார்கள். மிரட்டிப் பணிய வைப்பதற்கு அடிமை அ.தி.மு.க. ஆட்சி கிடையாது. இது எடப்பாடி தலைமையில் நடக்கின்ற ஆட்சி கிடையாது. இது நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில், நடக்கின்ற சுயமரியாதை உள்ள திராவிட மாடல் ஆட்சி.

### டெல்லியிடம் சரண்டரான அ.தி.மு.க.!

மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்றுசொன்ன அடுத்த நிமிடமே, ``நீ பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும், தமிழ்நாட்டுக்குள் மும்மொழிக் கொள்கையை நான் அனுமதிக்க மாட்டேன்" என்று ஒன்றிய அரசை எதிர்த்துச் சொன்னவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

இதுவே நீங்கள் கொஞ்சம் ஐந்து வருடங்களுக்கு முன்பு சென்று பாருங்கள். அ.தி.மு.க. ஆட்சி நடந்திருந்தால், என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராகவும், ஓ.பன்னீர்செல்வமும் துணை முதலமைச்சராகவும் இருந்து இருப்பார்கள். சக அமைச்சர்கள் எல்லாம், ``ஜி நீங்கள் இங்கு வராதீர்கள். நாங்கள் டெல்லிக்கு உங்களைத்தேடி வருகிறோம். உங்களுக்கு எந்தெந்த இடத்தில் கையெழுத்து வேண்டுமோ போட்டு கொடுக்கிறோம். பணம் கொடுங்கள், கொடுக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. நீங்கள் என்ன சொன்னாலும் செய்து தருகிறோம்" என்று சொல்லி இருப்பார்கள்.

நாமெல்லாம் இன்று இந்தி கற்றுக்கொள்ள முயற்சித்துக்கொண்டு இருப்போம். அந்த நிலைமைக்கு நாம் அப்போது தள்ளப்பட்டு இருந்தோம். நல்வாய்ப்பாக, தமிழ்நாட்டு மக்கள் சென்ற சட்டமன்றத் தேர்தலில் நம்மை வெற்றிபெறச்செய்து எல்லாவற்றையும் காப்பாற்றி இருக்கிறார்கள். தாய்மொழிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரே இயக்கம், நம் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே. இன்றைக்கு மற்ற மாநிலங்கள் எல்லாம் நம் தலைவரைப் பார்த்துப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தென்னகத்திலிருந்து ஒரு முதுகெலும்புள்ள அரசியல் கட்சி தலைவர், என்றால் நம் தலைவர் என்று மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள், மற்ற மாநில தலைவர்கள், மற்ற மாநில முதலமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

### தாய்மொழிகளை அழிக்கும் 'இந்தி'!

மோடி அவர்கள் எங்கு சென்று பேசத் தொடங்கினாலும் முதலில் திருக்குறளில்தான் ஆரம்பிப்பார். திருக்குறள் சொல்கின்ற பிரதமர் மோடி அவர்கள் கடந்த 10 ஆண்டுகளில், தமிழ் மொழிக்கு, தமிழ் மொழி வளர்ச்சிக்கு, தமிழ் மொழியைக் காப்பதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கி இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? வெறும் 167 கோடி ரூபாய். ஆனால், செத்த மொழி சமஸ்கிருதம், ஒரு சதவிகித பேர் கூட இப்பொழுது அதை பேசுவது கிடையாது. சமஸ்கிருதத்தையும், இந்தியையும் வளர்ப்பதற்கு கடந்த 10 வருடத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒதுக்கி இருக்கின்ற நிதி எவ்வளவு தெரியுமா? 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய். சமஸ்கிருதத்திற்கும் இந்திக்கும் ஒதுக்கிய நிதியில் வெறும் 7 சதவிகிதம் தான் நம் தமிழ்மொழிக்கு ஒதுக்கி இருக்கிறார். இதுதான் ஒன்றிய அரசு தமிழைப் போற்றி, பாதுகாக்கின்ற லட்சணம்.

மற்றொன்றையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தாய்மொழி உண்டு. பல மொழிகள் அந்த மாநிலத்தை விட்டு காணாமல் போய் விட்டன. இந்தி அதை விழுங்கி விட்டது. ஹரியானாவில் ஹரியானவி என்று ஒரு தாய் மொழி இருந்தது. இப்போது அதை யாருமே பேசுவதில்லை. அதேபோல் பீகாரில் பீகாரி என்று ஒரு தாய்மொழி இருந்தது. இப்போது அங்கு பீகாரி யாரும் பேசுவதில்லை. எல்லோரும் இந்திக்கு மாறி விட்டார்கள். இப்படி பல தாய் மொழிகளை விழுங்கிய மொழி தான் இந்தி மொழி. இதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, கலைஞர் வாழ்ந்த இந்த திருவாரூர் மண்ணிலிருந்து சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் வரை, ஒரு போதும் இந்தியைத் தமிழ்நாட்டிற்குள் பாசிஸ்ட்டுகளால் திணிக்க முடியாது. கருப்பு - சிவப்பு கரை போட்ட வேட்டி அணிந்த தி.மு.க-வின் கடைசி தொண்டன் இருக்கின்ற வரை நிச்சயம் அதை நாங்கள் அனுமதிக்கவே மாட்டோம்.

### அடுத்து வரவிருக்கும் ஆபத்து!

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினையை ஒன்றிய அரசு எடுத்து இருக்கிறது. தொகுதி மறுசீரமைப்புப் பிரச்சினை. நாடாளுமன்றத் தொகுதிகளை மக்கள்தொகை அடிப்படையில் வரையறை செய்ய போகிறோம் என்று சொல்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு செய்து, மக்கள்தொகைப் பெருக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசு பல வருடங்களாகச் சொல்லி வருகிறது. தென் மாநிலங்கள்தான் குடும்பக் கட்டுப்பாடுகளை அதிகரித்து, மக்கள்தொகை பெருக்கத்தை மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியது.

தமிழ்நாட்டின் மக்கள் தொகையை நாம் கட்டுப்படுத்தி ஏழு கோடியில் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் வடமநிலங்கள் இதைச் சரியாகச் செய்யவில்லை. வடமாநிலங்களில் மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அவர்களால் நிறைவேற்றவே முடியவில்லை. உதாரணத்திற்கு, உத்தரப் பிரதேச மாநிலத்தின் மக்கள் தொகை 20 கோடியைத் தாண்டி விட்டது. பீகாரின் மக்கள் தொகை 13 கோடியைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. இப்போது மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களை நிர்ணயம் செய்யப்போகிறோம் என்று மோடி அரசு சொல்கிறது. அப்படிச் செய்தால், இன்றைக்கு தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் இழந்து, 31- ஆகக் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இந்தியாவில் இருக்கின்ற மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 543. புதிய நாடாளுமன்ற கட்டடம் கட்டும் போதே மக்களவையில் 888 இருக்கைகள் ஏற்படுத்தினார்கள். தமிழ்நாட்டிற்கு வந்து பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் தமிழ்நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் வராது என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால் இதே அமித்ஷா நாடாளுமன்றத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்பு, கண்டிப்பாக தொகுதி மறுசீரமைப்பு நடக்கும், நிச்சயம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று சொன்னார். நம் தலைவர் இந்த பிரச்சினையைக் கையில் எடுத்ததற்கு பிறகு இப்போது மாற்றி பேசுகிறார்.

பிரதமர் மோடி அவர்களும் இதைச் சொல்லி இருக்கிறார். அதுமட்டுமல்ல சில ஆண்டுகளுக்கு முன்பு தெலுங்கானாவில், தேர்தல் பிரச்சாரத்திலேயே இதைப் பேசினார். நிச்சயமாக தொகுதிகள் அதிகரிக்கப்படும் என்று சொன்னார். இப்போது எல்லாவற்றையும் மாற்றி மாற்றிப் பேசுகிறார்கள். நான் கேட்பதெல்லாம் முதலில் அமித்ஷாவும், மோடியும் தனியாக உட்கார்ந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். எதைச் சொல்லலாம், எதைச் சொல்லக்கூடாது, எதை எந்த நேரத்தில் சொல்லலாம் என்று ஒரே முடிவெடுக்க வேண்டும்.

### நமது தலைவர்தான் முதலில் எதிர்க்கிறார்!

ஏனென்றால் தேர்தலுக்கு, தேர்தல் மாற்றிப் பேசுவார்கள். அமித்ஷா அவர்கள் தொலைக்காட்சி பேட்டியிலேயே சொன்னார். கறுப்புப் பணத்தை ஒழித்து 20 லட்சம் தருவோம் என்று சொன்னது, அது வெறும் தேர்தல் வாக்குறுதி, அது தேர்தல் முடிந்தவுடன் மறந்துவிட வேண்டும் என்று சொன்னவர் தான் அவர். இதை தமிழ்நாட்டு மக்கள் மறக்கக்கூடாது. இதைப்பற்றி வேறு எந்த தென் மாநிலமும் கவலைப்படாதபோது நம் தலைவர் அவர்கள்தான் இந்தியாவுக்கே முதல்குரலாக தமிழ்நாட்டில் இருந்து குரல் எழுப்புகிறார். நேற்று கூட இதற்காக, ஒரு அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. அனைவரையும் அழைத்து முப்பது வருடங்களுக்கு தொகுதி மறுவரை திட்டத்தைச் செயல்படுத்த கூடாது என்று தீர்மானம் போட்டு இருக்கிறோம். நம் நிலைப்பாட்டைப் பார்த்து இன்றைக்கு கர்நாடகம், தெலுங்கானா, பஞ்சாப், கேரளா மற்ற மாநிலங்கள் எல்லாம் இந்த பிரச்சினையை கையில் எடுத்து இருக்கிறார்கள்.

நம் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்திருக்கின்ற முடிவுக்கு ஆதரவு தெரிவித்து இருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு இப்படியெல்லாம் செய்து நம்மை நசுக்கப் பார்க்கிறார்கள், நாம் அதை எதிர்த்து நிற்பதால்தான் நம் மீது ஒன்றிய அரசுக்கு தொடர்ந்து கோபம் வந்து கொண்டிருக்கிறது. இதனால்தான் மற்ற இயக்கங்களுக்கு இல்லாத நெருக்கடிகளை, ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு நம் தமிழ்நாடு அரசுக்கு தொடர்ந்து தந்துகொண்டிருக்கிறது. தி.மு.க.-வின் குரல் இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களையும், அவர்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வைக்கிறது என்று பாசிஸ்டுகளுக்கு கவலை.

### இந்தியாவுக்கே நாம்தான் நம்பிக்கை!

சமீபத்தில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாடு என்ற பெயரையே தவிர்த்து விட்டார்கள். இரண்டரை மணி நேரம் பேசிய பட்ஜெட்டில், ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதில், ஒரு வார்த்தை, ஒரு முறை கூட தமிழ்நாடு என்ற வார்த்தையே இடம் பெறவில்லை. அந்த அளவிற்கு தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு இருக்கிறது. நம் தலைவர் அவர்கள்தான் இன்றைக்கு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய மக்களின் நம்பிக்கையாகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

சமூக நீதி, மாநில உரிமை, மொழி உரிமை, நிதிப் பகிர்வு என அனைத்துப் பிரச்சனைகளுக்கும், அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கக்கூடியது நம் தமிழ்நாடு. தமிழ்நாட்டு மக்கள் எப்பொழுதும் தி.மு.க. பக்கம்தான் நிற்கிறார்கள் என்று டெல்லிக்கு உணர்த்த வேண்டிய கடமை, நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. தொடர்ந்து

தொடர்ச்சி 9–ஆம் பக்கம்